சில இடங்களில் பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, அனைவருக்கும் பட்டா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு, வழங்கப்படுமா என்று தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே அந்தப் பகுதி மக்கள் 30 ஆண்டுகளுக்கு மேலாக அங்கே குடியிருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். அவர்களுக்கு அரசின் அனைத்து வசதிகளும் கிடைத்துக்கொண்டிருக்கின்றன என்ற விவரத்தையும் சொல்லியிருக்கிறார்கள். அரசு நிலங்களிலே குடியிருப்பு மூலமாக ஆக்கிரமணங்கள் செய்து, 5 ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் அங்கே குடியிருந்தாலே வரன்முறை செய்து பட்டா வழங்குவதற்கு வழிவகை இருக்கிறது. அந்த நிலத்தின் வகைப்பாட்டைப் பொறுத்து, பரிசீலனை செய்து, அரசு பட்டா வழங்கி வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்த நிலத்தின் வகைப்பாட்டைப் பார்த்து அரசாணை எண் 496—க்கு உட்பட்டு வருமேயானால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை பரிசீலித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 139, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

139—

தொழிற்பேட்டை

***47438—திரு. எஸ். ஈஸ்வரன்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகர் தொகுதி, பவானிசாகரில் தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2019 ஜூலை 18]

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின், ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதி, பவானிசாகரில் புதிய தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வங்கக் கடலோரம் துயில்கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி பணிந்து வணங்குகிறேன். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களையும், மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். பவானிசாகர் தொகுதி, பவானிசாகர் மற்றும் சத்தியமங்கலம், புஞ்சை புளியம்பட்டி மலைப் பகுதியான கடம்பூர் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளில் விவசாயம்தான் பிரதான தொழிலாக இருந்துவருகிறது. இப்பகுதிகளில் வேறு தொழில்கள் ஏதுமில்லை. எங்கள் பகுதியில் படித்த இளைஞர்கள் வேலை தொடங்குவதற்குரிய வாய்ப்புகள் இல்லாத காரணத்தால், 100 கிலோ மீட்டர் தூரமுள்ள திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் போன்ற பகுதிகளில் வேலை செய்துவருகிறார்கள். ஆகவே, எங்கள் தொகுதியில் தொழிலாளர்கள் அதிகம் இருக்கின்ற காரணத்தினாலும், புதிய தொழில் தொடங்க மக்கள் ஆர்வமாக உள்ளதாலும், மக்கள் நலன் கருதி புஞ்சை புளியம்பட்டியிலிருந்து பவானிசாகர் செல்லும் வழியில் 50 ஏக்கர் நிலம் உள்ள குரும்பபாளையம் கிராமம், அண்ணா நகர் பகுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, பவானிசாகர் அருகிலே தொழிற்பேட்டை அமைத்துத் தருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், பவானிசாகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பவானிசாகரில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க ஈரோடு மாவட்ட நிருவாகத்துடன் சிட்கோ நிறுவனத்தால் கலந்தாலோசிக்கப்பட்டது. மேற்கண்ட பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட, சத்தியமங்கலம், தாளவாடி வட்டங்களில் சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தேவையான 15 ஏக்கர் முதல் 30 ஏக்கர் வரையிலான அரசு புறம்போக்கு நிலங்கள் ஏதும் இல்லை எனவும், அந்தப் பகுதி அடர்ந்த வனப் பகுதியாக உள்ளதால், சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கத் தேவையான உகந்த அரசு நிலங்கள் இல்லை எனவும் மாவட்ட நிருவாகம் தெரிவித்த காரணத்தினால், அங்கு சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புஞ்சை புளியம்பட்டி கிராமத்தில் அரசு புறம்போக்கு நிலங்கள் இருப்பதாக இன்றைக்குத் தெரிவித்திருக்கின்றார்கள். இதுகுறித்து மாவட்ட நிருவாகத்தோடு கலந்தாலோசித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ் ஈஸ்வரன் அவர்கள்.

திரு. எஸ். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பரிசிலனை செய்யப்படும் என்கின்ற நற்செய்திக்கு எனது தொகுதி மக்கள் சார்பாகவும், எனது சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பவானிசாகர் தொகுதி, மலைப் பகுதியான தாளவாடி பகுதியை, விதிகளைத் தளர்த்தி, தனி வட்டமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தார்கள். அந்த மலைப் பகுதியிலிருக்கிற மக்கள் வேலைவாய்ப்பினைத் தேடி அருகிலுள்ள கர்நாடகா மாநிலத்திலுள்ள பெங்களூரு மற்றும் மைசூர் ஆகிய பகுதிகளுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது; அந்தப்

2019 ஜூலை 18]

பகுதியிலிருக்கிற 10 ஊராட்சிகளைச் சேர்ந்த மக்கள் விவசாயத் தொழிலை நம்பிதான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அப்பகுதி மக்களுடைய நலன் கருதி, தாளவாடி பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும், அந்தப் பகுதியில் ஏராளமான அரசு புறம்போக்கு நிலங்கள் இருப்பதாலும், தாளவாடி பகுதியில் ஒரு தொழிற்பேட்டை அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 140, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

140—

புதிய பேருந்து

***4934—திரு. அ. ராமு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குன்னூர் முதல் கோத்தகிரி வரை பிராவிடன்ஸ் மகளிர் கல்லூரி, பெல்லட்டிமட்டம், அளக்கரை, பெப்பேன், சேலாடா மற்றும் அரவேனு வழியாக புதிய பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) குன்னூர்—கோத்தகிரி வழித்தடத்தில், தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் மற்றும் தனியார் சிற்றுந்துகள் மக்களின் தேவைக்கேற்ப இயக்கப்படுகின்றன. மேலும், இவ்வழித்தடத்தில் போதுமான இணைப்புப் பேருந்துகளும் உள்ளன. எனவே, இவ்வழித்தடத்தில் புதிய பேருந்துகள் இயக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராமு அவர்கள்.*